July to December 2020

SEASL

# நீல நீந்தும் நண்டு சிற்றறிக்கை இல.14

ஸ்ரீலங்கா நீல நீந்தும் நண்டு மீன்பிடி மேம்படுத்தல் திட்டமானது (SLBSC FIP) தேசிய மீன்பிடி நிறுவக நண்டுப் பேரவையால் (NFICC) 2013ம் ஆண்டு வைகாசி மாதம் உருவாக்கப்பட்டு கார்த்திகை மாதம் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் அவர்களால் உத்தியோகபூ ரவ்மாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இத்திட்டமானது மீனவர்கள், கடலுணவு நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் ஆகியோரை ஒன்றிணைத்து பாக்கு நீரிணை மற்றும் மன்னார் வளைகுடாவில் இடம்பெறும் நீல நீந்தும் நண்டு மீன்பிடியின் கடல்வாழ் இருப்பின் உயிரியல் ரதீயான தகுதிநிலை மற்றும் மீன்பிடியின் வாழ்வுச் சூழலியல் தகுதிநிலை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான முத்தரப்பு முயற்சி ஆகும். அத்துடன் இத்திட்டமானது நீடித்து நிலைத்திருக்கும் வகையில் முகாமை செய்யப்படும் மீன்பிடி என்ற தகுதிநிலையை நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்திலும் பேணுவதற்கான மேலாண்மை நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதனையும் அடிப்படை நோக்காகக் கொண்டு செயற்படுத்தப்படுகின்றது.


Monterey Bay Aquarium Seafood Watch

நீல நீச்சல் நண்டு மீன்பிடியில் பாக்குநீரனை .மன்னார் வளைகுடா இந்த இரு மீன்பிடிகள் மட்டுமே இலங்கை மற்றும் தெற்குதென்கிழக்காசியாவின் நீல நீந்தும் நண்டு மீன்பிடிகளில் சிறந்த தெரிவு என மாண்டெரி பே அக்வாரியம் கடல்வாழ் திட்டத்தினால் மார்கழி 2018 இல்பரிந்துரை செய்யப்படுகின்றது. ஆத்துடன் மீண்டும்MSC மீன்பிடி தராதரத்தில் 0.80கூடதலான புள்ளி மே 2020 கிடைத்துள்ளது

CERTIFIED SUSTAINABLE SEAFOOD MSC www.msc.org


## கடல்வள இருப்பின் உயிரியல் ரீதியான தகுநிலையை மேம்படுத்தல்

மன்னார் வளைகுடா நீல நீச்சல் நண்டின் ஆறாவது வது வருடாந்த தொகை மதிப்பீடு 7 புரட்டாதி மாதம் முதல் 30 மார்கழி வரை மேற்கொள்ளப்பட்டது இதற்கான தரவுகளை பெலாயிகோஸ் தனியார் நிறுவனம் மீன்பிடி சமுதாயங்கள் ஏற்றுமதி நிறுவனங்கள் மற்றும் மாவட்ட கடற்றொழில் திணைக்களம் ஆகியோருடன் இனைந்து மேற்கொள்ளப்பட்டது. மன்னார் மாவட்டத்தில் 2 துறைகளிலும் புத்தள மாவட்டத்தில் 12 மீன்பிடிதுறைகளிலும் மொத்தமாக 7847 பெண் நண்டுகளின் நீளங்கள் அளக்கப்பட்டது. இந்த உற்பத்தி திறனானது பெறப்பட்ட நீள அளவுகளை அடிப்படையாக கொண்டு barefoot ecologist's இந்த இனையதளத்தினை பாவித்து் பெறப்பட்டது இந்த முடிவின்படி ன்னார் வளைகுடாவில் நண்டுகளின் உற்பத்தித் திறன் 33%.இந்த முடிவின்படி மன்னார் வளைகுடாவில் நண்டுகளின தொகை மிகவும் நல்ல நிலையில் உள்ளது ,30% க்கு மேல்.




| | |
|---|---|
| TRP | 30% |
| 2015 | 31% |
| 2016 | 46% |
| 2017 | 41% |
| 2018 | 37% |
| 2019 | 57% |
| 2020 | 33% |

2019ம் ஆண்டு தொகைமதிப்பீட்டின் படி நீல நீச்சல் நண்டு உற்பத்தி திறன(sp 57%) (2020ஆண்டு) வீதத்தில் இருந்து 33 வீதமாக குறைந்துள்ளது இதற்கு தொகை மதிப்பீட்டு காலமும் இந்த முடிவுக்கு ஒரு காரணமாக அமைகிறது 2020 தொகை மதிப்பீட்டு முடிவின்படிஉற்பத்தி திறன் 30%மேல் காணப்படுகிறது இந்த நிலை நீண்டு நிலைக்க கூடிய நண்டுத்தொழிலாக காணப்படுகிறது.. ஆனால் 2020இல் பெண் நண்டின் சராசரி நீளம் 149 மிமி 191கிராம் அவதானிக்கப்பட்டது.இதனடிப்படையில் 115தொடக்கம்191மிமி நீளமான நண்டுகள் 100-402 கிராம் 18%மான நண்டுகள் 200கிராமுக்கு மேற்பட்ட முதலாம் நிலை நண்டுகள் அளக்கப்பட்டன. பெரும்பாலான நண்டுகள் 41% மானவை மூன்றாம் நிலை 100-149 கிராம் அளக்கப்பட்டன. 36 % நண்டுகள் 150-199கிராமுக்குபட்ட இரண்டாம் நிலை நண்டுகள் அளக்கப்பட்டன் நிலை 8% வீதமான மிகச்சிறிய 115 மிமி 99 கிரரமுக்கு குறைந்த நண்டுகள் அளக்கப்பட்டன




மன்னார் வளைகுடாவில் நீல நீச்சல் நண்டுத் தொழிளாளிகள் கடலுணவு உற்பத்தியாளர்கள் 2017ம் 2018ஆண்டு மிக சிறிய 99 கிராமுக்கு குறைந்த நண்டுகள் ஒழுங்காக்கல் சம்பந்தமாக கவனத்தில் எடுத்தார்கள் புத்தள மாவட்டத்தில் 2018ம்ஆண்டில் 26 வீதமான மிகச்சிறிய நண்டுகளும் 16 வீதமான பருவமடையாத நண்டுகளும் அளக்கப்பட்டன .

ஏற்றுமதிக் கொம்பனிகளின் பொறுப்பால் 2019ம் 2020ம் ஆண்டுகளில் மிகச்சிறிய நண்டுகள் விற்பனை குறைவடைந்துள்ளது. 2020ம் ஆண்டில் மன்னார் வளைகுடாவில் மிகச்சிறிய நண்டுகள்வாங்குதல் 8%வீதமாக குறைந்துள்ளது அத்துடன் பருவமடையாத 5%வீதமாக உளளன

.

## மீன்பிடியின் வாழ்வுச் சூழலியல் தகுநிலையை மேம்படுத்துதல்


**இலக்கு வைக்கப்படாத உயிரினங்கள் மீதான வாழ்வுச் சூழல் ரீதியான தாக்கங்கள்:** சிறிலங்காவிலுள்ள சுறாக்கள் மற்றும் திருக்கைகள் தொடர்பாக அண்மையில் வெளியிடப்பட்ட புதிய ஆய்வறிக்கைக்கு (1) பதில் வினையாக நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களிலே வெளிறிய வாள்வால் திருக்கை (வலம் பார்க்கவும் - Telatrygonzugei முன்பு Dasyatiszugei) தொடர்பான வகுப்பு தொடர்பியல் மற்றும் விலங்கு – தாவரவடிவ அமைப்பியல் ரீதியான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது



Dorsal view of *Telatrygon zugei* collected for the NTS assessment

அண்மையில் பிரசுரிக்கப்பட்ட ஆய்வறிக்கையானது, 2015 இற்கும் 2019 இற்குமிடையே FIP ஆல் மேற்கொள்ளப்பட்ட இலக்கு வைக்கப்படாத உயிரினங்கள் (NTS) தொடர்பான ஆய்வுகளில் அடையாளம் காணப்பட்ட Dasyatiszugei now Telatrygonzugei என அறியப்படும் Dasyatiszugei now Telatrygonzugei ஆனது உண்மையில் ஒன்றில் Brevitrygonimbricata (செதிலுள்ள வாள்வால் திருக்கை அல்லது வங்காள சாட்டை வால் திருக்கை) யாக அல்லது புதிய ஒரு உயிரினமான BrevitrygonSpecies 1 ஐச் சேர்ந்ததாக இருக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளது. இந்த கண்டு பிடிப்புகள் 2019 ம் ஆண்டில் பெர்ணாண்டோ குழுவினரால் மன்னார் வளைகுடாவிலும் பாக்கு குடாவிலும் சிறுரக வாள்வால் திருக்கைகள் மீது மேற்கொள்ளப்பட்ட மூலக்கூறு பகுப்பாய்வுகளை அடிப்படையாக கொண்டுள்ளன.

இயற்கை பேணுவதற்கான சர்வதேச யுனியன் (IUCN) இன் சிவப்பு பட்டியலில் Bimbricatais தகவல் குறைபாடு கொண்டதாக குறிப்பிடப் பட்டிருக்கிறது. புதிய உயிரினமான BrevitrygonSpecies 1 உறுதிப்படுத்தப்பட்டால், அதுவும் தகவல் குறைபாடு கொண்டதாக வகை படுத்தப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. மொண்ரெறி குடா நீர்வாழ் உயிரின காட்சியாக (MBA) கடலுணவுக்கான கண்காணிப்பு நிகழ்ச்சி திட்டத்தின் மீன் பிடிக்கான செய்முறையின் படி, Bimpricatate அல்லது BrevitrygonSpecies 1 இன் தகுநிலையானது கீழ் இரண்டாம் (Secondary Minor) நிலையாகவே இருக்கும்.





*B. imbricata* specimen collected by Fernando *et al*. 2019. A. Dorsal surface of maturing male. B. Thorns and denticles on base of tail of mature male

இந்து சமுத்திரத்தில் உள்ள ஆபத்துக்கு உள்ளாயிருக்கும், அச்சுறுத்தலுக்கு உட்பட்டிருக்கும் மற்றும் பாதுகாக்கப்பட்ட இலக்கு வைக்கப்படாத நான்கு கடல் வாழ் உயிரினங்களான திமில் ஓங்கில்கள் (Humpback Dolphin ) ( Sousa Plumbea)இ தழையுண்ணும் பாலூட்டி ( Dugon dugong) பச்சை கடலாமை (Cheloniamydas) மற்றும் ஒலிவ் றைட்லி கடலாமை (Lepidochelysolivacea) முதலியவை மீது சிற்றளவு மீன்பிடி ஏற்படுத்தும் உள்ளார்ந்த தாக்கங்கள் தொடர்பான GIS அடிப்படையில் மன்னார் வளைகுடாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக் ஒக்ரோபர் மாசம் பண்டுவாவால், 2020 இனால் வெளியிடப்பட்டது. இந்த ஒவ்வொரு உயிரினத்தினது நிகழ்வு தரவுகள் உலகளாவிய தகவல் தளங்களை பயன்படுத்தியும் ஆய்வுப் பகுதியின் மீனவர்கள் மற்றும் சுற்றுலா ஏற்பாட்டாளர்களிடம் இருந்தும் சேகரிக்கப்பட்டன. இந்த நான்கு உயிரினங்களுக்குமான உயிரின பரம்பல் மாதிரியானது கடல் மேல் பரப்பு வெப்பநிலை, தாவரங்களுக்கு பசுமையூ ட்டிகள் (Chlorophill), ஆழம், கரையிலிருந்ததான தூரம், பல்வேறு மேடுபள்ள கோடுகள், வாழ்வுச் சூழல் போன்ற சூழ்நிலை சார் சாராமாறிகளை பயன்படுத்தி மக்ஸ் என்ற மென் பொருளில் உருவாக்கப் பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து மீன்பிடித் தளங்களின் பரம்பல் மற்றும் உயிரின வாழ்வுச் சூழல் பரம்பலுக்கு இடையேயான மேவுதல் சதவீதம் கணிக்கப்பட்டு ஒவ்வொரு மீன்பிடிக் கருவியின் காரணமாக நான்கு உயிரினங்களுக்கும் ஏற்படக் கூடிய இடர் வரவு பகுப்பாய்வு செய்யப்பட்டது



இந்த ஆய்விலே பயன்படுத்தப்பட்ட உயிரின பரம்பல் மாதிரியானது ஒவ்வொரு உயிரினமும் காணப்படுவதற்கு சாதகமான சூழ்நிலைகளைக் கொண்ட பகுதிகளை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது. சுறா வலை மீன்பிடித் தளங்கள், இந்து சமுத்திர திமில் ஓங்கில்கள் (12%) தழையுண்ணும் பாலூட்டிகள் (15%) மற்றும் பச்சைக் கடலாமைகள்(17%) முதலியவற்றுக்கு சாதகமான மிதமான மேவும் சதவீதங்களை கொண்ட பகுதிகளையும் ஒலிவ் றைட்லி கடலாமை வாழ்விடத்தைப பொறுத்த வரை உயர் மட்ட மேவும் சதவீதத்தை (25%) கொண்டிருந்தன. எனவே இந்த உயிரினங்களுக்கான சுறாவலை இடர் வரவானது "மிதமானது" இலிருந்து "உயர்அளவு" வரை இருக்கும் வாய்ப்புள்ளது. மேலும் இந்த ஆய்வானது திருக்கை வலைகளினால் ஒவ்வொரு உயிரினத்துக்கும் ஏற்படும் இடர் வரவும் "மிதமானது" இலிருந்து "உயாவானது" வரை இருக்கும் என்றும் திருக்கை வலை மீன்பிடித் தளங்களும் இந்து சமுத்திர திமில் ஓங்கில்கள் (12மூ) தழையுண்ணும் பாலூட்டிகள் (15%) மற்றும் பச்சைக் கடலாமைகள் (17%) ஒலிவ் றைட்லி கடலாமைகள் (25%) முதலியவற்றிற்கு சாதகமான சூழல்களும் ஒன்றையொன்று மேவுவதாலும் ஓரே மட்டத்தில் இருக்கின்றன என்றும் நிர்ணயித்துள்ளது. ஒவ்வொரு உயிரினத்திற்கும் BSC மீன்பிடித்தளங்களுக்கும் இடையேயான ஊடாட்டத்திற்கான ஒட்டுமொத்த இடர்வரவு மதிப்பீடானது இந்து சமூத்திர திமில் ஓங்கில்கள் (12%) தளையுண்ணும் பாலுட்டிகள் (7%) பச்சைக்கடலாமைகள் (9%) மற்றும் ஒலிப் றைட்லி கடலாமைகள் (4%) முதலியவற்றுக்கு மிதமானது இலிருந்து தழ்வானது வரையானதாக இருந்தது.




## கடல்சார் வாழ்விடங்கள் மீதான வாழ்வுச்சூழல் ரீதியான தாக்கங்கள்:

யுன் 2020 இல் FIB ஆனது பாக்கு வளைகுடாவிலுள்ள கடல்சார் வாழ்விடங்கள் BSC மீன்பிடி தாக்கங்கள் தொடாப்பான நிகழ்கால மட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டது. (விபரங்களுக்கு வெளியீடு 13ஐப் பார்க்கவும்) இந்த நிகழ்கால மட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட அறிக்கையானது BSC மீன்பிடியால் உள்ளார்ந்த ரீதியான தகாக்கத்திற்கு உட்பட்ட கடல்புற் பகுதியானது 7.958 கெக்ரேயா் அல்லது பாக்கு வளைகுடாவில் உள்ள கடல்புல் பரப்புகளில் 10% மானவையாக இருக்கின்றன என்ற கருத்தை முன் வைத்திருக்கிறது. பாக்குவளைகுடாவில் BSC மீன்பிடி வலைகள் மற்றும் பவளஃமற்றும் சுண்ணக்கல் பாறைகளுக்கு இடையோன ஊடாட்டமானது 0.94மூ (68.84ஹெக்) ஆகவும் கண்டல் தாவரப்பகுகளுக்கு 0.2% (1.2ஹெக்) ஆகவும் இருப்பதாகவும் மதிப்பீடு செய்யப்பட்ருக்கின்றது. இதற்கு ஒத்திசைவான மன்னார் வளைகுடாவின் அளவுகளாக கண்டல் தாவரப் பகுதிகளுக்கு (0.71) கடல் புற் படுகைகளுக்கு (16.73%) மற்றும் சுண்ணக்கல் பாறைகளுக்கு 5.64% ஆகவும் இருக்கின்றன.


# மீன்பிடியின் முகாமைத்துவத்தை மேம்படுத்தல்



**Fishery Specific Management Systems:** கார்த்திகை மாதத்தில் கடற்றொழில் திணைக்களத்தால் யாழ்ப்பாண மன்னார் களிநொச்சி முல்லைத்தீவு மற்றும் புத்தள மாவட்டசிரேஸ்ர காவல்துறை உத்தியொகத்தர்கள் மற்றும் கடல்படை உத்தியோகத்தர்களுக்கு கடற்றொழில் அமைச்சின் சட்ட அலுவலகர் திருமதி சாலிக்கா வடுதந்தரி என்பவாரல் மீன்படி சுட்டம் சம்பந்தமான பயிற்சி வழங்கப்பட்டது.இதில் முக்கியமான 1996ஆண்டு 2ம்இலக்க கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்ட குறிப்புகள் திருத்தங்கள் புதிய வரைபுகள் மற்றும் மாவட்டமீன்பிடிகள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டன. முதல் இரண்டு நிகழ்ச்சிகளும் கார்த்திகை 24ம.25ம்திகதிகளில் 59 பயனாளிகளுடன் நடைபெற்றது கடற்றொழில் திணைக்கள பணிப்பாள நாயகத்தால் சிரேஸ்ர அதிகாரிகள் குழு ஒன்று உருவாக்கப்பட்டு நீல நீச்சல் நண்டுத்தொழிலுக்கான சட்டத்தின் இறுதி வரைபு மார்கழி மாதத்தில நிறைவு செய்யப்பட்டது இந்த சட்டமானது4½" கண் (114.5 mm) குறையாத அளவை பயன்படுத்தி தொழில் செய்ய வேண்டும் ஏற்றுமதிக்காக நண்டுகளை கொள்வனவு செய்பவர்கள் 99கிராமுக்க குறைந்த மிகச்சிறிய நண்டுகளை கொள்வனவு செய்வதை தடுக்க வேண்டும்.

## சமூக பொருளாதார பங்கு முன்னேற்றம்

**கோவிட்-19**




உலகலாவியிய ரீதியாக கோவிட்-19 கொள்ளை நோயானது 2020 ஜனவரிக்கும் ஏப்பிரலுக்குமிடையே கடற்கரை விலையை கடுமையாக வீழ்ச்சியடையச் செய்துள்ளது. 60% வீழ்ச்சியடைய செய்துள்ளது. வட அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் BSC மீன்பிடி உற்பத்திகளுக்கான நுகர்வோர் கேள்வி இல்லாமல் போனேதே இதற்கு காரணமாகும் கடற்கரை விலைகள் யூ ன் மாததத்தில் மீண்டெழ தொடங்கியுள்ளன. (- 46%) பாக்கு வளைகுடாவின் மீன்படி தளங்களின் வாழ்வுச் சூழல் ரீதியாக பரிந்துரை செய்யப்பட்ட BSC உற்பத்திகளுக்கு டிசம்பரில் கிடைத்த சராசரி கடற்கரைவிலையானது வருட ஆரம்பத்தில் செலுத்தப்பட்ட விலைகலோடு ஒப்பிடும் போது 32% குறைவானதாக இருந்தது.

## பொருண்மிய ரீதியான சரிஒப்பரவு:

2020 டிசம்பரில் பாக்கு வளைகுடா மீன்பிடி தளங்களில் BSCக்கு செலுத்தப்பட்ட சராசரி விலையானது (இலங்கை ரூபா 496.00) 2019 ஜனவரியில் செலுத்தப்பட்ட கடற்கரை விலைகளோடு (இலங்கை ரூபா 871.00) ஒப்பிடும் போது 43% குறைவானதாக இருந்தது.
அதாவது இந்த மீன்பிடி தளமானது கடல் உணவு கண்காணிப்பகத்தால் வாழ்வுச் சூழல் ரீதியாக பரிந்துரைக்கப்பட்டு இரண்டு வருடங்களின் பின் இது நிகழ்ந்துள்ளது. அமெரிக்க இறக்குமதியாளர்கள் கூறுவதன்படி கடலுணவு கண்காணிப்பகத்தால் வாழ்வுச் சூழல் ரீதியாக பரிந்துரை செய்யப்பட்ட BSC உற்பத்திகளுக்கு வட அமெரிக்காவில் எந்தக் கேள்வியும் இல்லை. அமெரிக்க இறக்குமதியாளர்கள், சிறிலங்காவின் உற்பத்தியாளர்கள், சிற்றளவு மீன்பிடியாளர்கள் முதலியோருக்கு சிறிலங்காகவின் தனித்துவமான ஆசிய BSC உற்பத்திகளுக்கு இதுவரையில் ஒரு உயரளவு வாழ்வுச் சூழல் ரீதியான விலையை பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பதே இதன் பொருளாகும்.

**சமூகர்பொறுப்பு: .** இந்த அறிக்கை காலத்தில்இலங்கை நீல நீச்சல் நண்டுக்கான விநியோகச் சங்கிலியால் சமூகப் பொறுப்பை மேம்படுத்த மீன்பிடி முன்னேற்ற திட்டம் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.


SLBSC மீன்படி முன்னேற்ற திட்டத்தின் ஒத்துழைப்பு அங்கத்துவரான தப்ரபேன் சீ பூ ட் பிறைவேட் லிமிட்டட சிறிலங்கா கடலுணவு ஏற்றுமதியாளர் சங்கம். கடற்றொழில் நீரியல்வளத்திணைக்களம்.மற்றும் பாக்குநீரினை மற்றும் மன்னார் வளைகுடா நண்டுத்தொழில் சமுதாயங்கள் சார்பில் FIP ஆனது 2013 ம் ஆண்டிலிருந்து SLBSC மீன்பிடியை மேம்படுத்துவதற்கென தேசிய மீன்பிடி நிறுவக நண்டுப் பேரவையால் தொடர்ச்சியாக வழங்கப்பட்ட ஆதரவுக்காக அதற்கு நன்றி கூறுகிறது. அத்துடன் இந்த நீல நீந்தும் நண்டு செய்தி இதழில் குறிப்பிடப் பட்டிருக்கும் உப – செயல் திட்டங்களுக்கு நிதிஉதவி வழங்கிய ஆசியன் பவுன்டேசன் மற்றும் சிம் வுலுகிரப் பி வி ரி ஆகியவற்றுக்கு FIP நன்றி கூறுகிறது.